செ.வெ.எண் : 09 /ஜூலை நாள் : 04.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

# இராமநாதபுரம் மற்றும் மண்டபம் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து

# மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரடியாகச் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் மற்றும் மண்டபம் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து இன்று (04.07.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், நேரடியாகச் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

2016-2017 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற அரசு பொதுத்தேர்வில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் ஒட்டு மொத்த தேர்ச்சி சதவீதத்தில் 12-ஆம் வகுப்பில் 96.77% பெற்று மாநில அளவில் இரண்டாம் இடத்தையும், 10-ஆம் வகுப்பில் 98.16% பெற்று மாநில அளவில் மூன்றாம் இடத்தையும் பெற்று முந்தைய கல்வியாண்டின் தேர்ச்சி சதவீதத்தினை ஒப்பிடுகையில் நல்ல முன்னேற்றம் பெற்றுள்ளனர். இந்நிலையில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இராமநாதபுரம் மற்றும் மண்டபம் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து நேரிடையாக சென்று கள ஆய்வு செய்தார்.

வாலாந்தரவை கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி, பெருங்குளம் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி, உச்சிப்புளி கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி, வேதாளை கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய அரசு பள்ளிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசு மாணவ, மாணவியர்களின் நலனுக்காக வழங்கி வரும் விலையில்லா பாடப்புத்தகங்கள், விலையில்லா நோட்டுப்புத்தகங்கள் உள்ளிட்டவை மாணாக்கர்களுக்கு சிரமமின்றி சென்றடைந்ததா என்பது குறித்து கேட்டறிந்தார். மாணாக்கர்களின் தேர்வு மதிப்பெண் பதிவேடு ஆகியவற்றையும் ஆய்வு செய்தார். மேலும் மாணவர்களுக்கு அந்தந்த பாடம் வாரியாக தொடர்ச்சியாக தேர்வுகள் நடத்துவதோடு உடனுக்குடன் தேர்வு தாள்களை திருத்தி மாணவர்களை சுய மேம்பாடு செய்திட உறுதுணை புரிய வேண்டும் என ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதுதவிர ஆசிரியர்களின் பாடம் நடத்தும் முறைகள் மற்றும் ஆசிரியர்களின் வருகை குறித்து மாணவ, மாணவியர்களிடத்தில் கேட்டறிந்ததோடு, கல்வி கற்கும் வயதில் கவனங்களை சிதற விடாமல் ஒருமுகப்படுத்தி நல்லொழுக்கத்துடன் கல்வி கற்க வேண்டும் என மாணாக்கர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.க.முனுசாமி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**